20th March 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த திட்டங்கள் முதல் இடம் பெறக் கூடிய தகுதியிருந்தால் முதல் இடம் பெறும். அதை விட முக்கியமான திட்டங்கள் வந்தால் அவைகளுக்கு முதல் இடம் கொடுக்கப் படும்.

Seed Farms

* 916-D *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. Marudachalam) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to purchase a site in Perur village, Coimbatore, for opening a Seed Farm;

(*b*) whether there was any sudden change in selecting the place; and

(*c*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

Selection of students for admission to aided teachers' training schools

* 916-E *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf of SRI N. R. Thiagarajan) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தனி நபர்கள் மானேஜ்மெண்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கும் சர்க்காரால் நியமிக்கப்பட்ட கமிட்டியினரால் மாணவர்களைத் தேர்ந்தெடுக்க உத்திரவிட உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The proposal will be considered and a decision taken before the beginning of the next academic year.

SRI A. VEDARATHNAM : சில மதஸ்தாபனங்கள் நடத்துகிற இந்த பயிற்சி பள்ளிகளில் அந்த மதத்தினருக்கே முழுச் சலுகை கொடுக்கப் படுகிறது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? பிற மதத்தினர் அதில் இடம் பெற விரும்பினால் அதன் மூலம் அவர்கள் மத மாற்றத்திற்கு தூண்டப் படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொள்ளும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில ஸ்தாபனங்கள் இது மாதிரி ஒரு மதத்தினருக்கு மட்டும் தனி சலுகை கொடுக்கிறது என்று சில புகாரர்கள் வந்திருக்கின்றன. ஆனால் மத மாற்றம் ஏற்படுகிறது என்ற புகார் வரவில்லை. இதையெல்லாம் அனுசரித்து இதற்கு என்ன செய்வது, தனிப்பட்டவர்கள் பள்ளிகளுக்கும் ஒரு கமிட்டி போடுவது அவசியமா என்பதைப்பற்றி இப்பொழுது யோசித்துகொண்டு வருகிறோம்.

SRI A. GOVINDASAMY : இம்மாதிரி பயிற்சிப் பள்ளிகளில் வருகிற மாணவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள், கதர் அணிந்து கொண்டு வருகிறவர்களாக இருந்தால் கதர் போட்டு வரும் மாணவர் களுக்கு விசேஷ சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இதைத் தவிர்க்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.